DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : OS 17/2018 – C/W 361/2019 PW : 1

Name : ராதாகிருஷ்ணன் Age –

S/o : ரத்தினம் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 24.02.2026

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) நாங்கள் கூர் சீட்டின் அடிப்படையில் பாகம் பிரித்து கொண்டு அனுபவித்து வருகிறோம். சர்வே எண் 1 மற்றும் 2 நீலகண்டன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது கூட்டு குடும்பமாக இருக்கும் போது அவர் பெயரில் வாங்கப்பட்டது. தாவா சொத்தின் அசல் பத்திரங்கள் 1ம் பிரதிவாதி வசம் தான் உள்ளது. என்னுடைய கூர் சீட்டு மனிமுதலியார் இடம் உள்ளது. ஒவ்வொரக்கும் தனித்தனியாக கூர் சீட் வழங்கப்பட்டது. அவரவர் பாகம் பிரித்து அந்த கூர் வழங்கப்பட்டது. எனக்க கொடுக்கப்பட்ட கூர் சீட் என் பாகத்திற்கு உண்டானது ஆகும். என் கூர் சீட்டில் என் பாகம் சம்மந்தமாக எழுதப்பட்டுள்ளது. ஒரே கூர் சீட்டில் இன்னாருக்கு இவ்வளவு பாகம் என்று பிரித்து எழுதப்படவில்லை. வா.சா.ஆ.15 அனைவரும் சேர்ந்தார் போல் எழுதப்பட்ட கூர் சீட்டு ஆனால் நான் சொல்லும் கூர் சீட்டு தனித்தனியாக ஒவ்வொறு நபருக்கும் எழுதி வழங்கப்பட்டது. நான் சொல்வது போல் நீலகண்டனின் சொத்தை எனக்கு ஒதுக்கி கூர் சீட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மையிலேயே எனக்க பாகம் பிரித்து கொடுத்திருநதால் சொத்துக்களில் அசல் ஆவணங்கள் என்னிடம் ஒப்படைத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் நீலகண்டனின் தனிப்பட்ட முறையில் வாங்கி சொத்துக்கள் என்றாலும் அவர் முறைப்படி அனுபவித்து வந்து 3ம் பிரதிவாதிக்கு

கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 1, 2 அயிட்ட நான் எந்த காலகட்டத்திலும் அனுபவித்து இல்லை என்றாலும் நான் தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) நான் ஒரு போலியான கூர் சட்டின் அடிப்படையில் உரிமை கொண்டாடி வந்ததால்தான் எனக்கு எதிரிாக 1, 2 பிரதிவாதிகள் ஒரு தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த தாவாவை முறியடிக்கும் நோக்கத்தில் தான் ஒரு வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கது என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.